


01. 11. 2025

தலைப்புச்செய்திகள்

- மாநிலங்களின் மேம்பாட்டை அடிப்படையாக கொண்டு நம் நாட்டை வளர்ச்சி அடைந்த தேசமாக உருவாக்க அரசு முனைப்புடன் செயலாற்றுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- ஸ்ரீஹரிகோட்டா சத்திஸ்தவான் விண்வெளி மையத்திலிருந்து LVM3-M5 ராக்கெட் நாளை விண்ணில் செலுத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் தயார்நிலையில் உள்ளன.
- நெடுஞ்சாலைத்துறை சார்பில் ஆயிரத்து 250 கோடி ரூபாய் மதிப்பிலான சாலை, மேம்பால திட்டங்களை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.
- வால்பாறை சுற்றுலாத்தளத்திற்கு இ-பாஸ் நடைமுறை இன்றுமுதல் அமலுக்கு வந்துள்ளது.

- ஹைலோ ஓப்பன் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் அரையிறுதியில் இந்தியாவின் உன்னத்தி ஹூடா – இந்தோனேஷியாவின் Wardani-ஐ இன்று எதிர்கொள்கிறார்.

இனி விரிவான செய்திகள்

**************

பிரதமர்

மாநிலங்களின் மேம்பாட்டை அடிப்படையாக கொண்டு நம் நாட்டை வளர்ச்சி அடைந்த தேசமாக உருவாக்க அரசு முனைப்புடன் செயலாற்றுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

சட்டீஸ்கட் மாநிலம் ராய்பூரில் அம்மாநில சட்டப்பேரவைக்கான புதிய கட்டிடத்தை இன்று திறந்துவைத்தததுடன் முன்னாள் பிரதமர் அட்டல் பிஹாரி வாஜ்பாயின் திருவுருவ சிலையையும் திறந்துவைத்து பிரதமர் பேசினார்.

மாநிலங்களின் வளர்ச்சியும் நாட்டின் வளர்ச்சியும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது என்று பிரதமர் சுட்டிக்காட்டினார்.

வரும் காலங்களில் உலக அளவில் அமைதியை நிலைநாட்டும் முயற்சிகளை மேற்கொள்ளும் மிகப்பெரிய தளமாக நம்நாடு உருவாகும் என்று அவர் எடுத்துரைத்தார்.

சட்டீஸ்கட் மாநிலம் உருவான 25-ம் ஆண்டு கொண்டாட்டங்களில் பங்கேற்ற பிரதமர், 14 ஆயிரம் கோடி

ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித்திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

கிராமங்களின் ஆளுமையை மேம்படுத்தும் வகையில் 12 புதிய ஸ்டார்ட் அப், 4 வழி பசுமைசாலை உள்ளிட்டவை இதில் அடங்கும்.

**************

மாநிலங்கள் உருவான தினம்

கர்நாடகா, கேரளா, ஆந்திரா சட்டீஸ்கட் ஹரியானா மத்திய பிரதேசம் பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் மற்றும் லட்சத்தீவு புதுச்சேரி யூனியன் பிரதேசங்கள் உருவான தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்ட செய்தியில், நாட்டின் வளர்ச்சியில் தனித்துவத்துடன் கூடிய முக்கிய பங்காற்றும் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் மேலும் வளம்பெற வாழ்த்துவதாக கூறியுள்ளார்.

**************

ராஜ்நாத்சிங்

இந்தோ பசிபிக் பிராந்தியத்தில் அமைதி ஸ்தரதன்மை திறன்மேம்பாடு உள்ளிட்டவற்றை ஆசியான் நாடுகளுடன் மேலும் வலுப்படுத்த இந்தியா விரும்புவதாக பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இன்று தொடங்கிய 12ஆவது ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள்

மாநாட்டில் உரையாற்றிய அவர், இந்தியாவின் கிழக்கு நோக்கிய கொள்கையில் ஒருங்கிணைந்த வெளிப்படையான தெளிவான விதி சார்ந்த நடவடிக்கைகள் உறுதி செய்யப்படுவதாக தெரிவித்தார்.

**************

CMS-03 செயற்கைகோள்

தொலைதொடர்பிற்கான இந்தியாவின் முதல் கனரக செயற்கைகோள் CMS-03, ஸ்ரீஹரிகோட்டா சதீஸ்தவான் விண்வெளி மையத்திலிருந்து LVM3-M5 ராக்கெட் மூலம் நாளை விண்ணில் செலுத்தப்பட உள்ளது.

4 ஆயிரத்து 400 கிலோ எடை கொண்ட இந்த கனரக செயற்கைகோள் ஸ்ரீஹரிகோட்டாவின், முதல்ராக்கெட் ஏவுதளத்தில் இருந்து, விண்ணில் செலுத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார்நிலையில் உள்ளன.

**************

சரக்கு சேவை வரி

பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசின் அறிவிப்பிற்கு ஏற்ப தற்போது நடைமுறைக்கு வந்த சரக்கு சேவை வரி சீர்திருத்தங்களால் தமிழ்நாட்டின் பொருளாதாரம் உத்வேகம் பெற்றுள்ளது.

இதுகுறித்த ஒரு செய்தி தொகுப்பு

மத்திய அரசின் அடுத்த தலைமுறைக்கான சரக்கு சேவை வரி சீர்திருத்தங்களால் தமிழகத்தை சேர்ந்த

கலைஞர்கள், தொழில்துறையினர், ஏற்றுமதியாளர்களின் தொழில் வளர்ச்சி கண்டுள்ளது.

ஜவுளித்துறையை பொருத்தவரை திருப்பூர் பின்னலாடை, காஞ்சிபுரம் பட்டு உட்பட பிற புவிசார்ந்த கைத்தறி பொருட்களுக்கு சரக்கு சேவை வரி 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.

சுவாமிமலையில் உள்ள வெண்கல சிலைகள், கல், மரம் சார்ந்த உற்பத்தி பொருட்களுக்கும் சரக்கு சேவை வரி 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கையால் ஜவுளித்துறையினரும், கைவினை கலைஞர்களும் மிகவும் பயனடைந்துள்ளதோடு அப்பகுதியில் வேலை வாய்ப்பும் பெருகியுள்ளது.

ஜரிகை மீதான வரி 12 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதம் குறைக்கப்பட்டுள்ளதால் தமிழர்களின் பாரம்பரிய காஞ்சிபுரம் பட்டு சேலைகளின் விலையும், சராசரியாக குறைந்து வாங்கும் திறன் நுகர்வோரிடையே அதிகரித்துள்ளது.

இதுதவிர கடல், கடல்சார் உற்பத்தி பொருட்கள், மீன்வள பொருட்களுக்கும் வரி 5 சதவிகிதமாக குறைந்ததால் மாநிலத்தில் மீனவர் சமூகத்தினர் பெரும் பயடைந்துள்ளனர்.

மீன் பதப்படுத்துதல் போன்ற சிறு தொழிலும், ஏற்றுமதி தொழிலும் வளர்ச்சி கண்டுள்ளது.

கயறு உற்பத்தி பொருட்கள் மீதான வரி 5 சதவிகிதம் குறைக்கப்பட்டதால் கயறு தொழிற்சாலைகளும் முன்னேற்றம் கண்டுள்ளன.

மொத்தத்தில் சரக்கு சேவை வரி குறைப்பால் மாநிலத்தில் வீட்டு உபயோக பொருட்களின் விலை குறைந்ததோடு தொழிற்சாலைகளும் பயனடைந்து வருகின்றன.

இந்த சீர்திருத்த நடவடிக்கைகள் ஊரக வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, தொழில்மையமாக தமிழகத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் வலுப்பெறுள்ளன.

**************

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் நெடுஞ்சாலைத்துறை சார்பில் ஆயிரத்து 250 கோடி ரூபாய் மதிப்பிலான சாலை மேம்பால திட்டங்களை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக இன்று தொடங்கிவைத்தார்.

திருவாரூர், மயிலாடுதுறை, தஞ்சை, திருவள்ளுர் திருநெல்வேலி அரியலூர் மதுரை மாவட்டங்களின் சாலை பணிகள்,

வேலூர் மாவட்டத்தில் சாலை மேம்பால பணிகள் ஆகியவை இதில் அடங்கும்.

சென்னையில் 19 கோடி ரூபாய் மதிப்பிலான 87 புதிய 108 அவசரகால ஊர்திகளின் சேவைகளையும் அவர் துவக்கிவைத்தார்.

வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறையில் தொழில்நுட்ப உதவியாளர் பணியிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 24 பேருக்கு பணிநியமன ஆணைகளை முதலமைச்சர் வழங்கினார்.

விருதுநகர், தேனி ராமநாதபுரம் பெரம்பலூர் சிவகங்கை உள்ளிட்ட மாவட்டங்களில் கிறிஸ்தவர்களுக்கான பொது கல்லறை தோட்டங்கள், மற்றும் இஸ்லாமியர்களுக்கான பொது கபர்ஸ்தான்கள் பராமரிக்கும் ஆணைகளை நகராட்சி ஆணையர்களிடம் முதலமைச்சர் அளித்தார்.

**************

சேகர்பாபு

தமிழக திருக்கோவில்களில் பக்தர்களின் நலனுக்காக நவீன திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் திருக்கோவிலில் தொடுதிறன் தகவல் பெட்டி துவக்கவிழாவில் பேசிய அவர் இதன்மூலம் பல்வேறு திருக்கோவில்களின் 4 கோடி பக்கங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

விக்ரகங்கள் பாதுகாப்பிற்காக ஆயிரத்து 800 அறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக கூறிய அவர், அனைத்து பிரதான

கோவில்களிலும் கண்காணிப்பு கேமரா பொருத்தும் பணி 80 சதவிகிதம் நிறைவுபெற்றுள்ளதாக கூறினார்.

வாய்ஸ்

**************

பெரியகருப்பன் – கிராமசபை

தமிழகத்தில் நகர்புறங்களுக்கு இணையாக கிராமங்கள் வளர்ச்சி அடைந்து வருவதாக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம் சூரக்குடி கிராம ஊராட்சியில் இன்று நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் உரையாற்றிய அவர் கிராம சாலைகளை மேம்படுத்துவது உள்ளிட்ட அனைத்து அடிப்படை தேவைகளை அரசு முறையாக செயல்படுத்தி வருவதாக கூறினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி பொற்கொடி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், ஜல்ஜீவன், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

**************

மூர்த்தி - கிராமசபை

மதுரை ஆலாத்தூர் கிராமத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் மாநில வணிகவரி பதிவுத்துறை அமைச்சர் திரு.மூர்த்தி பங்கேற்றார்.

தொடர்ந்து கோச்சடை வைகை ஆற்றிலிருந்து பிரியும் அவனியாபுரம் கால்வாய் தூர்வாரும் பணிகளை பார்வையிட்டார்.

**************

கன்னியாகுமரி

கன்னியாகுமரி மாவட்டம் தாய் தமிழகத்துடன் இணைந்த நாள் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, இதற்காக போராடிய மார்ஷல் நேசமணியின் நினைவை போற்றும் வகையில் நாகர்கோவிலில் அரசு சார்பில் மரியாதை செலுத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**************

சேலம் உதய தினம்

தமிழகத்தின் பழமை வாய்ந்த நகரங்களில் ஒன்றான சேலம் நகரம் 160-வது ஆண்டில் இன்று அடியெடுத்து வைத்துள்ளது.

மேக்னசைட், பாக்சைட் உள்ளிட்ட 134 வகையான கனிமவளங்கள் நிறைந்த இம்மாவட்டம் பல்வேறு வரலாற்று அரசியல் சிறப்புகளை கொண்ட மாவட்டமாக திகழ்வது குறிப்பிடத்தக்கது.

**************

மயிலாடுதுறை

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி பெருந்தோட்டம் ஏரியில் ஆகாய தாமரைகளை அகற்றும் பணிகள் முழுமை அடைந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**************

வால்பாறை - இபாஸ்

சுற்றுலா தலமான ஊட்டி கொடைக்கானலை தொடர்ந்து வால்பாறைக்கும், இ-பாஸ் நடைமுறை இன்றுமுதல் அமலுக்கு வந்துள்ளது.

குரங்கருவி, கவியருவி உள்ளிட்ட அடர்ந்த வனப்பகுதிகளை கொண்ட வால்பாறை சுற்றுலா தலத்திற்கு ஏராளமானோர் வந்துசெல்லும் நிலையில் இ-பாஸ் நடைமுறை அமல்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் பிளாஸ்டிக் மற்றும் நெகிழி பொருட்கள் கொண்டு செல்லவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

**************

ஒற்றுமை ஓட்டம்

தர்மபுரியில் தேசிய ஒற்றுமை விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

அரசு கலைக்கல்லூரி சார்பில் நடைபெற்ற இப்பேரணியில் தேச ஒற்றுமையை வலியுறுத்தும் பல்வேறு நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

லஞ்ச ஒழிப்பு கண்காணிப்பு வாரத்தை ஒட்டி சேலத்தில் இன்று நடைபெற்ற பேரணியில் கல்லூரி மாணாக்கர் பங்கேற்று நாடகம் மூலம் ஊழலற்ற சமூகத்தை உருவாக்குவது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

**************

இருவரி

நாமக்கல் மாவட்டத்தில் 65 வயதிற்கு மேற்பட்ட முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் இல்லங்களுக்கு நேரில் சென்று அத்தியாவசிய பொருட்கள் வழங்கும் பணி வரும் திங்கள் செவ்வாய்கிழமைகளில் நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி துர்காமூர்த்தி தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் ரபி பருவ காப்பீடு பெற டிசம்பர் 30ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திரு.இளம்பகவத் தெரிவித்துள்ளார்.

**************

மீன்

தூத்துக்குடி திரேஸ்புரம் நாட்டுப்படகு மீன்பிடி துறைமுகத்தில் மீன் வரத்து அதிகரித்துள்ளது.

பல்வேறு வகையான மீன்கள் கிலோ 250 ரூபாய் முதல், ஆயிரத்து 300 ரூபாய் வரை விற்பனை ஆனதால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**************

சதயவிழா

தஞ்சை பெரியகோவிலில் மாமன்னன் ராஜராஜ சோழனின் ஆயிரத்து 40வது ஆண்டு சதயவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான, ராஜவீதிகளில் திருமுறை வீதிஉலா இன்றுகாலை நடைபெற்றது.

பெருவுடையார், பெரியநாயகி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், தேவார பன்னிசையுடன் சுவாமி திருவீதி உலா உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் இன்றுமாலை நடைபெறும்.

**************

பேட்மிண்டன்

ஹைலோ ஒப்பன் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் அரையிறுதியில் இந்தியாவின் உன்னத்தி ஹூடா – இந்தோனேஷியாவின் Wardani-ஐ இன்று எதிர்கொள்கிறார்.

**************

மகளிர் கிரிக்கெட்

இந்திய - தென்னாப்பிரிக்கா மகளிர் அணிகளுக்கிடையேயான ஐ.சி.சி உலக கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டம் நவி மும்பையில் நாளை நடைபெறுகிறது.

**************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.